# பன்னிருநாமம்

## தனியன்

பன்னிரு நாமம் திருவத்தியூர்ப் பரன் பாதமென்று *
நன்னிற நாமம் படை திக்கு யாவையும் நாமறியத் *
தென்னந் தமிழ்த்தொடைச் சீரார் கலித்துறை ஓதியீந்தான் *
மின்னுறு நூலமர் வேங்கட நாத நம் தேசிகனே.

கார்கொண்ட மேனியன் பாதாம் புயத்தைக் கருத்திருத்தி *
ஏர்கொண்ட கீர்த்தி இராமாநுசன் தன் இணையடிசேர் *
சீர்கொண்ட தூப்புல் திருவேங்கட ஆரியன் சீர்மொழியை *
ஆர்கொண்டு போற்றினும் அம்மால் பதத்தை அடைவிக்குமே.

1:##
கேசவனாய்நின்று* கீழைத் திசையிலும் நெற்றியிலும் *
தேசுடை ஆழிகள் நான்குடன்* செம்பசும்பொன் மலைபோல் *
வாசி மிகுத்தென்னை* மங்காமல் காக்கும் மறையதனால் *
ஆசைமிகுத்த* அயன் மகவேதியில் அற்புதனே. (2)

2:
நாரணனாய்* நல்வலம்புரி நாலுமுகந்தெடுத்து *
ஊரணி மேகமெனவே* உதரமும் மேற்கும் நின்றும் *
ஆரணநூல் தந்தருளால்* அடைக்கலம் கொண்டருளும் *
வாரண வெற்பில்* மழைமுகில்போல் நின்ற மாயவனே.

3:
மாதவ நாமமும்* வான்கதை நான்கு மணிநிறமும் *
ஓது முறைப்படியேந்தி* உரத்திலும் மேலும் மல்கி *
போதலர் மாதுடன்* புந்தியில் அன்பால் புகுந்தளிக்கும் *
தூதனும் நாதனுமாய* தொல் அத்திகிரிச் சுடரே.

4:
கோவிந்தன் என்றும் குளிர் மதியாகிக்* கொடியவரை *
ஏவுந் தனுக்களுடன்* தெற்கிலும் உட் கழுத்து நின்று *
மேவும் திருவருளால்* வினைதீர்த்து என்னை ஆண்டருளும் *
பூவன் தொழ* அத்திமாமலைமேல் நின்ற புண்ணியனே.

5:
விட்டு வல வயிற்றின் கண்* வடக்கும் விடாது நின்று *
மட்டவிழ் தாமரைத் தாது* நிறங்கொண்ட மேனியனாய்த் *
தொட்ட கலப்பைகள்* ஈரிரண்டாலும் துயரறுக்கும் *
கட்டெழில் சோலைக்* கரிகிரிமேல் நின்ற கற்பகமே.

6:
மதுசூதனன் என் வலப்புயம்* தென்கிழக்கென்று இவற்றில் *
பதியாய் இருந்து* பொன் மாதுறை பங்கய வண்ணனுமாய் *
முதுமா வினைகளறுக்கும்* முயலங்கள் ஈரிரண்டால் *
மதுவாரிளம் பொழில்* வாரண வெற்பின் மழைமுகிலே.

பன்னிருநாமம்

7:
திருவிக்கிரமன் திகழ் தீ நிறத்தன்* தெளிவுடைவான் *
உருவிக் கரங்களில்* ஈரிரண்டேந்தி வலக்கழுத்தும் *
செரு விக்கிரமத்து அரக்கர் திக்கும்* சிறந்தாளுமிறை *
மருவி கரிகிரிமேல்* வரம் தந்திடு மன்னவனே.

8:
வாமனன் எந்தன் வாமோதரமும்* வாயுவின் திசையும் *
தாம மடைந்து* தருண அருக்கன் நிறத்தனுமாய்ச் *
சேம மரக்கலம்* செம்பவி ஈரிரண்டால் திகழும் *
நா மங்கை மேவிய* நான்முகன் வேதியில் நம்பரனே.

9:
சீரார் சிரீதரனுய்ச்* சிவன் திக்கும் இடப்புயமும் *
ஏரார் இடங்கொண்டு* இலங்கு வெண் தாமரை மேனியனுய் *
பாராய பட்டயம்* ஈரிரண்டாலும் பயமறுக்கும் *
ஆராவமுது* அத்தி மாமலேமேல் நின்ற அச்சுதனே.

10:
என் இருடீகேசன் இறை கீழ்* இடக் கழுத்து என்று இவற்றில் *
நன்னிலே மின்னுருவாய்* நாலு முற்கரங் கொண்டளிக்கும் *
பொன்னகில் சேர்ந் தலேக்கும்* புனல் வேகை வடகரையில் *
தென்னன் உகந்து தொழும்* தேனவேதியர் தெய்வமொன்றே.

11:
எம் பற்பநாபனும்* என்பின் மனம் பற்றி மன்னி நின்று *
வெம் பொற் கதிரவனுயிரம்* மேவிய மெய்யுருவாய் *
அம் பொற்கரங்களில்* ஐம் படை கொண்டு அஞ்சல் என்றளிக்கும் *
செம் பொற் திருமதிள்சூழ்* சிந்துரா சலச் சேவகனே.

12:##
தாமோதரன் எந்தன் தாமங்கள்* நாலு கரங்களில் கொண்டு *
ஆமோதரமென* ஆகத்தின் உட்புறம் பிற் கழுத்தும் *
தாமோர் இளங்கதிரோனென* என்னுள் இருளறுக்கும் *
மாமோக மாற்றும்* மதிள் அத்தியூரின் மரகதமே. (2)

13:##
கத்தித் திரியும் கலேகளே வெல்லும்* கருத்தில் வைத்துப் *
பத்திக்கு உறுதுணே* பன்னிருநாமம் பயில்பவர்க்கு *
முத்திக்கு மூலமெனவே மொழிந்த* இம்மூன்று நான்கும் *
தித்திக்கும் எங்கள்* திருவத்தியூரரைச் சேர்ப்பவர்க்கே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: